பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விழுயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 27 வியாழக்கிழமை 12.09.2024 கதிர் 309

## இனிது ரகசியம் அல்ல!

மூன்றுநாள்களாகநாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தொடர்பிலான வீடியோ ஒன்று சர்ச்சையைக் கிளப்பியபடி உலாவிக் கொண்டுள்ளது. ஒரு சிலருடன்

☞2

## வடக்கில் பிளவடைந்து கிடப்போரின் தீர்மானங்கள் பயனற்றவை

# யாழ்ப்பாணத்தில் கூறப்படுவதைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லப்போகிறோமா?

## இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் திருக்கோவிலில் கேள்வி




யாழ்ப்பாணத்தில்கூறப்படும்விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது அனைவரும் இணைந்து கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரத்தையும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறைக்கு தமிழ் அமைச்சரொருவரையும் பெற்றுக் கொள்ளப் போகின்றோமா? எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பதுஎன்றுதீர்மானிக்கமுடியாமல் வடக்கில்பிளவடைந்துகாணப்படுபவர்களின் தீர்மானங்கள் பயனற்றவை என்று இராஜாங்க அமைச்சர் சிவனேசதுறை

☞2

## "குழந்தைகள் வேண்டாம்"

தேர்தல் பரப்புரைகளுக்கு குழந்தைகளைபயன்படுத்தவேண்டாமெனஅரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

தேர்தல்பரப்புரைகளில்குழந்தைகளைப் பயன்படுத்திய வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக 'சுரகிமு தருவென்' தேசிய இயக்கம் நேற்று தேர்தல் ஆணையத்திடம்முறைப்பாடுஒன்றையும் அளித்துள்ளது.

☞8


## நாமலின் கூட்டம் மீது நேற்றுக் கல் வீச்சு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிவேட்பாளர்நாமல்ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் அம்பாந்தோட்டைசிறிபோபுரபிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் மீது கற்கள் வீசப்பட்டுள்ளன.

இந்தக் கல் வீச்சுத் தாக்குதலில் கூட்டத்தில் கலந்து கொண்ட குழந்தை ஒன்று காயமடைந்து அம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் நாமல் ராஜபக்ச, சமல் ராஜபக்ச, ஷிரந்தி ராஜபக்ச ஆகியோர்பங்கேற்கவிருந்தனர். அவர்கள் வருகை தருவதற்கு முன்னதாக கூட்ட அரங்கின் மீது தொடர்ச்சியாக மூன்று கற்கள் வீசப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

☞2




## இன்றைய ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி நாட்டையே அழிக்கின்றனர்

### அதனால்தான் அரசியலுக்கு வந்தேன் என்கிறார் திலித்

இன்றைய அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி இந்த நாட்டை அழித்து வருகின்றனர் என்று சர்வஜன ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பரப்புரைக்கூட்டம் நேற்று சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சிக் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர்

☞8

## கவிழப்போகும் கப்பலில் ஏறி நின்று தற்கொலை செய்ய விருப்பமில்லை

### சஜித் பக்கம் தாவிய கீதா தெரிவிப்பு

சஜித் வெற்றி பெறுவார் என்பதால் தானே நீங்கள் அங்கு சென்றீர்கள் என்று என்னிடம் கேட்கின்றனர். அதுவே உண்மையாகும். கவிழப்போகும்கப்பலில்ஏறி தற்கொலைசெய்துகொள்ள நான் விரும்பவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்கீதாகுமாரசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ளஐக்கிய மக்கள்சக்திஅலுவலகத்தில் நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்கு நான் எடுத்த தீர்மானம் எனது சுய உரிமையாகும். எனது 14 வருட அரசியல் வாழ்வில் கட்சி தாவும் அரசியல் மற்றும்அடிமைத்தனமான அரசியலை நான் வெறுக்கின்றேன். எவ்வித சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொண்டதில்லை.

☞8

## 359 கைதிகளுக்கு இன்று விடுதலை

தேசிய கைதிகள் தினத்தை முன்னிட்டு இன்று 359 சிறைக் கைதிகள் ஜனாதிபதி விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இவர்களில் நால்வர் பெண்களாவர்.

அரசமைப்பின் 34ஆவது பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்களின்படி, இந்தக் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறிய குற்றங்கள் மற்றும், சிறிய அபாராத தொகையைச் செலுத்த தவறியமை உள்ளிட்ட காரணங்களால் சிறையில் இருந்தவர்களுக்கே பொது மன்னிப்பு

☞8

## கோசம் எழுப்புவோரிடம் உங்கள் எதிர்காலத்தை ஒப்படைக்காதீர்கள்

### பொய் சொல்பவர்களிடம் ஏமாறாதீர் - ரணில்

அனைத்தையும் இலவசமாக வழங்குவதாக சஜித் சொல்கிறார். சில நாட்களில் தலைவலியையும் இலவசமாகதருவார். அநுரஏற்றுமதிப் பொருளாதரம் பற்றி பேசினாலும், இறக்குமதி பொருளாதாரம் பற்றி சுனில் ஹந்துன்னெத்தி கூறுகிறார். கோசம்எழுப்புபவர்களுக்கு உங்கள் எதிர்காலத்தை ஒப்படைக்காதீர்கள். பொய்செல்பவர்களிடம்ஏமாறாதீர்கள். உண்மை நிலைய ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யுங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

☞2

## மலையக மக்களும் முஸ்லிம்களும் அரியத்தாருக்கு வாக்கிடவேண்டும்

### விக்னேஸ்வரன் கோரிக்கை

தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் பாராளுமன்றத்தில் மலையகமக்களுக்காகமுன்னர்குரல் கொடுத்தவராவார். அவர் மலையக மக்களை சகோதர சகோதரிகளாகவே நேசிக்கின்றார். மலையக மக்களும் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களும் அவருக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை அவர்

☞2

## இராணுவத்தினரது உரிமைகளைப் பற்றி பேச ரணில், சஜித், அநுரவுக்கு உரிமை கிடையாது

### நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவிப்பு

30 வருட கால போரை முடிவுக்கு கொண்டு வந்த சர்வதேசத்துக்கு காட்டிக் கொடுத்தது. இதற்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். இராணுவத்தினரது உரிமைகள் பற்றிபேசுவதற்குஇந்தமூவருக்கும் தார்மீக உரிமை கிடையாது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக இவர்கள் மூ-வரும் குறிப்பிடுகிறார்கள். 13க்கு ஒருபோதும் இடமில்லை குறிப்பிடுகிறார் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொஸ்கமவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள்கட்சியின்கொள்கை மற்றும் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதியின் பக்கம்

☞8

## அநுரகுமார ஜனாதிபதியானால் டொலர் விலை ரூ. 400 ஆகும்

### அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியானால் டொலர் விலை 400 ரூபாயாகும் என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுடனான சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றிருப்பது நாம் 2019 இல் இருந்த

☞8

## தபால் வாக்களிப்புக்கு இன்று இறுதி வாய்ப்பு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்கை இதுவரை அளிக்காதவர்கள்; வாக்களிக்க இன்றையதினம் இறுதிச் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவர் நடத்திய சந்திப்புத் தொடர்பான வீடியோ அது. அதில் கலந்துகொண்ட ஒருவர்தான் சுற்றிச் சுற்றி அந்த வீடியோவை எடுக்கிறார் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அதாவது அது ஒன்றும் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட காட்சி அல்ல. அந்த வீடியோவில் சார்ள்ஸ் நிர்மலநாதன் பேசும் சில வார்த்தைகள்தான் பிரச்சினைக்குரியவையாக, விமர்சனத்திற்குரியவையாக இருக்கின்றன. ''நிதி அமைச்சராக இருப்பேன்; ஜனாதிபதியுடன்தான் இருப்பேன்'' என்று அவர் கூறுகின்ற வாசகங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தக் காட்சியை பொதுவெளியில் பகிர்ந்தவர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் நீங்கள் பேசும் 'டீல்' என்ன என்று பகிரங்கப்படுத்துங்கள், என் மீது சட்டநடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்கிறார்.

மூன்று நாள்களாகியும் அந்த வீடியோ தொடர்பான எந்தப் பதிலும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் இருந்து வந்ததாகத் தெரியவில்லை. ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஜனாதிபதிக்கு ஆதரவு என்று சர்ச்சைகள் அடிபட்டுவரும் நிலையில் இந்த வீடியோ எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோன்று இருக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து அரியநேத்திரன் இந்தத் தேர்தலில் நிறுத்தப்படுவதை முதலில் எதிர்த்த சார்ள்ஸ் நிர்மலநாதன் பின்னர் அவருக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இதன் பின்னணியிலும் இந்த வீடியோ சர்ச்சைகளைக் கிளறுகின்றது. எனவே நாடாளுமன்ற உறுப்பினர் உண்மையைத் தெளிவுபடுத்தினால் நல்லது. அவர் யாருடன் இந்தச் சந்திப்பை நடத்தினார். அதில் அவர் என்ன பேசினார் போன்ற விடயங்களைத் தெரியப்படுத்தினால் இந்தச் சர்ச்சை ஒரு முடிவுக்கு வரக்கூடும்.

.........................

ஜனாதிபதித் தேர்தலில் அரியநேத்திரன் நிறுத்தப்பட்டபோது அவருக்கு வாக்களிக்கும் தமிழர்கள் அவருக்கு மட்டுமே வாக்களிக்கவேண்டும் என்று கோரப்பட்டது. அதாவது, அரியநேத்திரனுக்கு வாக்களிப்போர் இரண்டாவது மூன்றாவது தெரிவு வாக்குகளுக்குப் போகக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு முக்கிய காரணமே இந்த பொது வேட்பாளர் விவகாரமே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படுகின்றது என்று பொதுக் கட்டமைப்பினர் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனம்தான். மற்றைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு தமிழ் வாக்குகள் போய்விடக்கூடாது என்கிற காரணத்தால்தான் பொது வேட்பாளர் விடயம் முன்வைக்கப்படுகின்றது என்று குற்றச்சாட்டு இருந்தது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் விக்னேஸ்வரன் போன்றவர்களும், ரணில்தான் அடுத்த ஜனாதிபதியாகவேண்டும் என்று கூறிக்கொண்டு பொது வேட்பாளரை ஆதரித்தனர். இது போன்ற சர்ச்சைகளை அடுத்து அரியநேத்திரனுக்கு வாக்களிப்போரை மற்றொரு வேட்பாளருக்கு இரண்டாவது மூன்றாவது தெரிவுக்குப் போகுமாறு கேட்பதில்லை என்று பொதுக் கட்டமைப்புத் தரப்பில் முடிவு செய்யப்பட்டது.

ஆனால், தேர்தலுக்கு இன்னும் 9 நாட்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் நிலையில், சாக்குக்குள் இருந்து குதிக்கும் பூனை போன்று, அரியநேந்திரனுக்கு வாக்களிப்போர் தமது இரண்டாவது வாக்கை ரணிலுக்குச் செலுத்தலாம் என்பதாக ஒரு கருத்தை ரெலோவின் செயலாளர் நாயகம் ஜனாதி விடுத்துள்ளார். அவரது கருத்து அடங்கிய காணொலியும் சமூக ஊடகங்களில் தீவிரமாகச் சர்ச்சையைக் கிளப்பி வருகின்றது. ஆக மொத்தத்தில் என்னதான் நடக்கிறது என்று தெரியவில்லை. அடுத்தடுத்த நாள்களில் இப்படி எதையெல்லாம் சொல்லிச் சொல்லி மக்களை முட்டாள்களாக்குவார்களோ என்கிற பதற்றத்திலேயே ஒவ்வொரு நாள்ளையும் கழிக்கவேண்டியிருக்கின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## யாழ்ப்பாணத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அம்பாறை – திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் என்பது மக்களின் ஆணையூடாக அதிகாரத்தைப் பிடிப்பதாகும். இலங்கையில் நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் என்பது சிறுபான்மை மக்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். அந்த வகையில் கிழக்கு மக்களின் முழு நம்பிக்கையையும் வென்ற தலைவராக ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு நாம் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் மிகப் பிரம்மாண்டமான கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இருப்பினும் அம்பாறையில் தமிழ் பிரதேசங் களில் கூட்டங்கள் நடத்தப் படவேண்டும் எனத் தீர்மானித்து கல்முனை மற்றும் திருக்கோவில் பிரதேசங்களில் இரு வேறு கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நாட்டு மக்கள் மிகுந்த துயரத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்வந்தார். அதற்கு செலுத்தும் நன்றிக்கடனாக நாம் மீண்டும் மக்கள் ஆணையை அவருக்கு வழங்க வேண்டும். அம்பாறை தமிழ் மக்கள் நிச்சயம் ரணில் விக்கிரமசிங்கவுக்கே வழங்கப்படும்.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு அம்பாறையின் அபிவிருத்தியில் மக்கள் பங்கா ளர்களாக வேண்டும். வடக்கு, கிழக்கில் நீண்ட காலமாக புரையோடிப் போயுள்ள உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்திருக்கின்றார். விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்ப டுவதோடு, அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

குறிப்பாக காணி சீர்திருத்த சட்டம் கூட அவரால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. எமக்கு தனிப்பட்ட அரசியல் நோக்கம் கிடையாது. பல்வேறு பொது பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத்தில் கூறப்படும் விடயங்களைக் கேட்டு அழிவை நோக்கிச் செல்லப்போகின்றோமா அல்லது அனைவரும் இணைந்து கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரத்தையும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறைக்கு தமிழ் அமைச் சரொருவரையும் பெற்றுக் கொள்ளப் போகின்றோமா? எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்று தீர்மானிக்க முடியாமல் வடக்கில் பிளவடைந்து காணப்படுபவர்களின் தீர்மானங்கள் பயனற்றவை என்றார்.

## நாமலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## கோசம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் ஏராளமான தொழில் வல்லுந கள் மற்றும் வர்த்தகர்கள் கலந்து கொண்டதுடன் அவர்களின் கேள்விகளுக்கும் ஜனாதிபதி பதிலளித்தார்.

ஜனாதிபதி அங்கு தெரிவித்ததாவது:

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் நாடு நாசமடையும். ரஜரட்ட ராஜ்ஜியம் பலம் வாய்ந்ததாக இருந்தது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால் அந்த இராஜ்ஜியம் வீழ்ந்தது. 2022 இல் அதேநிலை ஏற்பட்டது. மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டது. நான் தேடிச் செல்லவில்லை. யாரும் இல்லாததால் என்னைப் பொறுப்பேற்கச் சொன்னார்கள்.

பொருளாதாரம் இன்றேல் நாட்டில் அரசியல் எதிர்காலம் ஒன்று இருக்காது. வரலாற்றில் ஒருபோதும் நிகழாதவாறு அனைத்துக் கட்சிகளையும் இணைத்துச் செயற்பட்டோம். அதன் பயன் கிடைத்துள்ளது.

பொருளாதர உறுதிப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மீண்டும் வீழ்ச்சி ஏற்படலாம். ஓரிருவருடங்களில் இந்தநிலைக்கு வந்திருக்கிறோம். உங்கள் எதிர்காலம் என்ன என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் இது. உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதா அல்லது மீள வீழ்வதா என தீர்மானிக்க வேண்டும். திருடர்களை எப்பொழுதும் பிடிக்கலாம். இன்றுள்ள பிரதான பிரச்சினை பொருளாதார ஸ்தீரநிலையாகும். இறக்குமதிக்காக தினமும் கடன்பெற முடியாது. பெற்ற கடனை மீளச் செலுத்த 2042 வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. எனவே ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்து வருமானம் உயரும் போது வரிச்சுமையும் குறையும். 24 மணி நேரத்தில் அது நிகழாது. இரண்டு மூன்று வருடங்கள் செல்லும். நிவாரணம் வழங்கும் செயற்பாட்டை அடுத்த வருடம் மேற்கொள்ளலாம். உணவு ஏற்றுமதி மேற்கொள்ளலாம். நெல் உற்பத்தியை மேம்படுத்த வேண்டும்.

முதலீட்டு வலயங்களை அதிகரிக்க வேண்டும். எண்ணெய் குதங்களை இப்பகுதிக்கு கொண்டு வர உள்ளோம். இப்பகுதி முன்னேற்றப்படும். இதில் தான் எதிர்கால முன்னேற்றம் தங்கியுள்ளது. இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாக்கப்படும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி அளித்த பதில்கள் பின்வருமாறு:

கேள்வி: அநுராபுரத்தில் வாகன திருத்தும் பணிகளுக்கு பயிற்றப்பட்ட ஊழியர் தட்டுப்பாடு காணப்படுகிறது. உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகமாக இருக்கின்றன. அதற்கு என்ன தீர்வு வழங்குவீர்?

பதில்: பலர் வெளிநாடு சென்றுள்ளனர். ஒவ்வொருதுறைக்கும் ஏற்ற தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கை ஆரம்பிப்போம். உதிரிப்பாகங்களை இங்கு உற்பத்தி செய்வது இலாபகரமானதாக இருந்தால் இங்கு மேற்கொள்ளலாம். ஆனால் சலுகை வழங்குவது கஷ்டம். அடுத்த வருடம் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும்.

கேள்வி : மோசடி ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்தீர்கள். திருடர்களைப் பிடிப்பதாகவும் திருடிய பணத்தை கொண்டு வருவதாகவும் சில வேட்பாளர்கள் கூறுகிறார்கள். சட்டத்தை கையில் எடுத்து அவ்வாறு செய்ய முடியுமா?

பதில்: அநுரவும் சஜித்தும் திருடர்களை பிடிப்பதாக சொல்கிறார்கள். பிடிக்க இருக்கும் திருடர்கள் யார்? தம்முடன் இருப்பவர்கள் அல்லர். ஆளும்தரப்பில் இருப்பவர்களை தான் திருடர் என்கிறார்கள். ஜி.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா போன்றோர் இப்போது அவர்களுடன்தான் இருக்கிறார்கள் பிடித்துக் கொள்ளுங்கள். நான் பிரதமராக இருந்தபோது திருடர்களைப் பிடிக்க பணிப்பாளர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று ஜே.வி.பி கோரியது. ஆனந்த விஜேபாலவின் பெயரை அவர்கள் பிரேரித்தனர்.

அவர் சட்டத்தரணியும் அல்லர். பொலிஸ் அதிகாரியும் அல்லர். அவரை நாம் நியமித்தோம். இப்பொழுது திருடர்களைப் பிடிப்பது பற்றி பேசுகிறார்கள். ஏன் அவரை பிரேரித்தீர்கள். இப்பொழுது மற்றவர்களை குறை கூறிப் பயனில்லை. திருடிய சொத்துக்களை மீளப் பெற சட்டம் கொண்டுவர வேண்டும். அவர்களின் அறிக்கையில் அதுபற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. அரசியல் மேடைகளில் பொருளாதாரம் பற்றியும் திருடர்களைப் பிடிப்பது பற்றியும் பேசுகின்றனர்.

கேள்வி : வடமத்திய மாகணம் குறைந்த பங்களிப்பையே மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்குகிறது. அங்கு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான திட்டம் பற்றி கூற முடியுமா?

பதில்: தமது பிரதேசத்தில் பொருளா தாரத்தைப் பலப்படுத்துவதற்காக மாகாண சபைகளைப் பலப்படுத்துவோம். 9 மாகாண சபைகளையும் பலப்படுத்துவோம். ஆளும்தரப்புடன் இணைந்து செயற்பட நடவடிக்கை எடுப்போம். விவசாயம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கேள்வி : தொழில் முயற்சியாளர்கள் என்ற வகையில் கடந்த காலத்தில் நீங்கள் எடுத்த நடவடிக்கைகளுக்கு உங்களுக்கு நன்றி. தொழில்முயற்சியாளர்கள் தொழில்பதிவின் போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா?

பதில்: வர்த்தகம் ஆரம்பிக்கையில் அனைத்து துறைகளையும் இணைத்து ஆலோசனை சேவை வழங்க இருக்கிறோம். வர்த்தகமொன்றை ஆரம்பிக்கும் போது அது தொடர்பில் வர்த்தகர்களுக்கு ஆலோசனை வழங்கலாம். உங்களுக்கு எவ்வாறான உதவி வழங்கலாம் என கவனிக்கலாம். சுயதொழில் பெற உதவி அளிக்கவும் முடியும்.கேள்வி: தொழில் முயற்சியாளர்கள் என்ற வகையில் நாம் ஊழியர்களுக்கு சிறந்த சம்பளத்தை வழங்கினாலும் அவர்கள் எந்தநாளும் கடனிலேயே உள்ளனர். பிள்ளைகளின் தனியார் வகுப்புகளுக்கு அவர்கள் அதிகம் செலவிடுகின்றனர். டியுசன் முறை தொடர்பில் எத்தகைய நடவடிக்கை எடுக்க முடியும்? அத்தோடு ஹோட்டல்கள் இருக்கும் காணிகளுக்கு காணி உறுதி வழங்க முடியுமா?

பதில்: எமது கல்வி முறையில் உள்ள குறைபாட்டினால் தான் டியுசன் பலமடைந்துள்ளது. முன்பெல்லாம் சில பாடங்கள் தொடர்பில் மேலதிகமாக அறிவதற்காக மேலதிக வகுப்புகளுக்கு பிள்ளைகளை அனுப்பினார்கள். முன்பு டியுசன் வகுப்புகள் குறைவாகவே இருந்தன. ஆனால் கல்வித் துறையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் தனியார் வகுப்பு ஆசியர்கள் உள்ளிட்ட அனைவரையும் இணைத்து இந்தப் பிரச்சினை தொடர்பில் செயற்பட வேண்டும்.

ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்யும் போது பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. எனவே இவை அனைத்தையும் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. உறுமய

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மூத்தோருக்கான தேசியக் கொள்கை வென்றதும் சஜித் அறிமுகப்படுத்துவார்

நாட்டின் வயதில் மூத்த குடிமக்களுக்காக தேசிய கொள்கையொன்றை அறிமுகப் படுத்தவுள்ளதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற மூத்தோருக்கான மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

அந்த கொள்கைகளைச் செயற்படுத் துவதற்காக, விசேட ஜனாதிபதி செயலணி யொன்றை நிறுவி, சிரேஷ்ட பிரஜைகளை வலுப்படுத்தவுள்ளார் என்றும் அவர் தெரிவித் தார்.

மூத்தோர் நாட்டுக்குச் சுமை என்று பலர் கூறுகின்ற போதிலும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களே பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மூத்தோரைப் பாதுகாப்பதற்காக பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும். அத்துடன், அவர்களுக்கான கொள்கைகளைச் செயற்படுத்தி, வாழ்வதற்கான மகிழ்ச்சியான சூழல் உருவாக்கப்படும்.

தற்போதைய ஆளும்தரப்பால் இல்லாமல் செய்யப்பட்டுள்ள, மூத்தோரின் சேமிப்புக்கான 15 சதவீத வட்டி, எமது ஆட்சியில் மீண்டும் பெற்றுக் கொடுக்கப்படும்.

அத்துடன், மூத்தோருக்காகச் சிறந்த சுகாதார சலுகைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# ஹெகலியவுக்குப் பிணை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட மூவர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் மாளிகாகந்த நீதிவான் லோச்சனீ அபேவிக்ரம முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களுக்குப் பிணை அனுமதிக்கப்பட்டது.

அதற்கமைய, தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 2 சீரப் பிணைகள் மற்றும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையின் அடிப்படையில் அவர்களை விடுவிப்பதற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 3 சந்தேகநபர்களும் கடுமையான மன உளைச் சலுக்கு ஆளாகியுள்ளனர் எனவும் அவர்கள் கடுமையான உளநலப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ளனர் எனவும் முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிவான், அதனை விசேட காரணமாக கருதி சந்தேகநபர்களை நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

தரமற்ற நோயெதிர்ப்பு மருந்துகளை நாட்டின் வைத்தியசாலை கட்டமைப்பிற்குள் பகிர்ந்தளித்த சம்பவம் தொடர்பில் கடந்த 8 மாதங்களாக கெஹெலிய ரம்புக்வெல்ல விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந் தனர்

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தம் உரிமைக்கானது அது சிங்கள மக்களுக்கு எதிரான ஒன்றே அல்ல

## முன்னாள் தவிசாளர் நிரோஸ்



தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டமை சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல. மாறாக இந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ் மக்கள் வரலாற்று ரீதியில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கானது என தழிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் அரிய நேத்திரனை ஆதரித்து செவ்வாய்க் கிழமை மாலை வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தமிழ்த் தேசியம் இன்று பலவாறாக அகத் துண்டாலுக்கு உட்பட்டு வருகின்றது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளியுலகிற்கும் ஆட்சியில் அமர்பவர்களுடன் பேசுவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான நிலைமைகளை பலமிழக்கச் செய்து விடுமோ என்ற நியாயபூர்வமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அவ் அச்சத்தில் நியாயபூர்வமான யதார்த்தம் உள்ளது. தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடைய இனமான நாம் எமது அரசியல் அபிலாசைகளை சாதாரண ஜனநாயக உரிமைகளுடன் மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது.

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் எந்தளவுதூரம் ஆட்சியில் அமரக்கூடிய ஒருவருக்கு ஆதரவு அளிக்கலாம் என்று சிலர் அல்லும் பகலும் அறைபோட்டு சிந்திக்கின்றனர். செயற்படுகின்றனர். அவர்கள் இந்த நாட்டில் வெல்லக்கூடிய ஒருவரை தேடிப்பிடித்து சலுகைகளைப் பெற்று; பெற்று சகித்து வாழுவோம் என்ற என்ற மனநிலையில் இனத்தை அடமானம் வைக்கின்றனர்.

நாட்டில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வாழ்கின்றனர் என்பதற்காக எண்ணிக் கையில் குறைந்த அளவுடைய நாட்டின் தேசிய இனமான தமிழ் இனம், இன உரிமைகளை விற்று வாழ முடியாது. சிங்கள பேரினவாதிகளுக்கு நோகக்கூடாது என்று வாழ்பவர்கள் எம்மிடத்தில் அதிகரித்துவிட்டனர். இட்சியத்தினையும் தியாகத்தினையும் விற்றுப்பிழைப்பதில் முன்டியடிக்கின்றனர்.

மண்ணுக்காக எத்தனையோ தியாகங்களை எம் இனம் மேற்கொண்டிருக்கின்றது. அடிப்படையில், எமது மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியும் எமக்கு சமஸ்டி அடிப்படையிலான உலகம் ஏற்றுக்கொண்ட அரசியல் தீர்வை முன்வைக்கக் கோரியும் நாம் பொது வேட்பாளரை முன்நிறுத்திச் செயற்படுவது நியாயபூர்வமாகச் சிந்திக்கும் எந்தவொரு சிங்களப் பிரஜைக்கும் எதிரான வேலைத்திட்டம் கிடையாது. சிங்கள முற்போக்கு சக்திகளும் சொந்த தாய் நாட்டில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகும் தமிழ் மக்களின் கருத்து வெளிபாட்டு உரிமைக்கும் ஜனநாயக உரிமைக்கும் மதிப்பளித்து வாக்களிக்க முடியும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எமது அரசியல் அபிலாசைகளை தொடர்ந்தும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்றும் உள்ள நிலையில் ஒருமித்து தமிழ் பொது வேட்பாளரின் சின்னமான சங்கு சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கடமையை நிறைவேற்றுவோம் என ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினரும் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.(05)

# ஹக்கீம், ரிசாத், தமிழ்க் கூட்டமைப்பு முட்டுக்கொடுத்த மைத்திரி ஆட்சிபோல் திருட்டு ஆட்சியே மீள ஏற்படும்

## உலமா கட்சி சாடல்

(பாறுக் ஷிஹான்)

அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாஸ வாக்குறுதியளித்துள்ளார் என செய்திகள் வெளியான வண்ணம் உள்ளன.எனவே இதற்கான தெளிவான பதிலை சஜித்துடனுள்ள ரவூப் ஹக்கீமும் ரிஷாத் பதியுதீனும் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்கவேண்டுமென ஸ்ரீலங்கா உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சமகால அரசியல் தொடர்பாக ஸ்ரீலங்கா உலமா கட்சி தலைவர் - முபாறக் அப்துல் மஜீத் அனுப்பியுள்ள செய்தி குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது -

ரவூப் ஹக்கீம் என்பவர் முஸ்லிம் சமூகத்தின் துரோகி என்று 2001 முதல் பகிரங்கமாக சொல்லி வருகிறேன்.2001 இல் அதாவுள்ளாவும் ஹக்கீமுடன்தான் இருந்தார். அப்போதெல்லாம் எங்களை தூற்றிய பழைய, புதிய முஸ்லீம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இப்போது ஹக்கீமை தூற்றுகிறார்கள். எனினும் உண்மை மிக தாமதமாகத்தான் புரிய வரும். அது போன்று தான் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற திருட்டு கட்சிக்காரர்களை சேர்க்கமாட்டோம் என ஜேவிபி அநுரகுமார பேசி வந்தார். ஆனால் இப்போது அதாவுல்லாவின் கட்சியில் மாகாண சபை உறுப்பினராக இருந்து பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அதன் தலைமை நிர்வாகத்தில் இருந்த ஒருவரை தேசிய மக்கள் சக்தி தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

அவ்வாறாயின் ஏமாற்று கட்சியில் இருந்து கொண்டு சமூகத்தின் வாக்குகளை விற்று சுக போகம் அனுபவித்த கட்சியின் அனைத்து செயல்களுக்கும் துணை போய் விட்டு இப்போது கட்சி மாறினால் நல்லவரா? இப்படியானவர்களை தேசிய மக்கள் சக்தியில் இணைப்பதன் மூலம் தற்போது அநுரகுமார தன் கொள்கையிலிருந்து விலகி திருடர்களை இணைக்காமல் வெற்றியைப்பெற முடியாது என்ற நிலைக்கு வந்துள்ளாரா?என்பதை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும்.இது தவிர இதைத்தான் நாம் சொல்கிறோம் மாற்றம் என்பது ஆள்களை மாற்றுவதால் ஏற்படாது, நல்ல அரசியலை உருவாக்கும் மன மாற்றம் மக்கள் மனதிலும் அரசியல்வாதிகள் உள்ளத்திலும் வரவேண்டும்.பாத்திரங்கள் வேறு கள்ளு ஒன்றுதான் என்பதை மக்கள் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சி செயலாளராக இருந்த மைத்திரி பெல்டி அடித்ததும் அவர் நல்லவராகிவிட மாட்டார் என அப்போதே சொன்ன ஒரேயொரு முஸ்லிம் கட்சி உலமா கட்சியாகும். ஆனால் இல்லையில்லை என முஸ்லிம் சமூகம் மறுத்து செத்துப்போனவனும் வந்து மைத்திரிக்கு ஓட்டுப்போட்டான். கடைசியில் மஹிந்த ஆட்சியைவிட மோசமானது ஹக்கீம் ரிசாத் தமிழ் கூட்டமைப்பு முட்டுக்கொடுத்த மைத்திரி ஆட்சி என்பது எல்லோரும் அறிந்த உண்மை.மேலும் ஒரு கட்சியில் இருந்து சுக போகம் அனுபவித்து விட்டு சந்தர்ப்பத்துக்கு கட்சி மாறுபவன் நிச்சயம் பெரும் மோசடிக்காரன். இப்படியான இன்னும் பல மோசடிக்காரர்கள் தேசிய மக்கள் சக்தியில் (ஜேவிபி) இணைந்து மீண்டும் மைத்திரி ஆட்சி போல் திருட்டு ஆட்சியே ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90ஆவது ஆண்டு நிறைவும் முத்தமிழ் விழாவும்

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அயலில் உள்ள எட்டுப் பாடசாலைகளை இணைத்து முத்தமிழ் விழா எதிர்வரும் 17.09.2024 அன்று யாழ்.கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஸ்தாபகர் வைத்தியர் அமரர் அப்பாப்பிள்ளை சின்னத்துரை அவர்களின் திருவுருவச் சிலை திறந்து வைக்கப் படவுள்ளது.

இத்திருவுருவச் சிலையை ஸ்தாபகரின் பேரன் மாணிக்கவாசகர் ஜெயக்குமாரும் ஸ்தாபகரின் பெறாமகன் சுப்பிரமணியம் விஜயகுமாரும் இணைந்து திறந்து வைக்கவுள்ளனர்.

பாடசாலையின் 90 ஆவது ஆண்டு நிறைவையொட்டி முத்தமிழ் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. மலருக்கான வெளியீட்டு உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார். மேலும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

பாடசாலையின் முதல்வர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லண்டனில் வசிக்கும் ஸ்தாபகரின் பேரனார் மாணிக்கவாசகர் ஜெயக்குமாரும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பாலசிங்கம் வாசுதேவனும் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பாடசாலைச் சமூகம் அன்புடன் அழைக்கின்றது.

(05)

# நல்லூரில் தவறவிடப்பட்ட பொருள்களை பெறுமாறு யாழ். மாநகர சபை அறிவிப்பு

நல்லூர் மகோற்சவ காலத்தில், ஆலயத்திற்கு வருகை தந்தவர்களால் தவறவிடப்பட்ட பொருள்கள் சிலது யாழ். மாநகர சபையில் உள்ளதாகவும் , அதனை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஆலயத்திற்கு வருகை தந்தவர்கள் தவறவிட்ட பொருள்கள் கண்டெடுத்தவர்கள் , அவற்றை ஆலய உற்சவ கால பணிமனையில் ஒப்படைத்திருந்தனர்.

அவற்றில் இது வரை உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளாத கைச்சங்கிலி ஒன்று, மோதிரம் (பெண்களினது) ஒன்று, பணப்பைகள் 9, மணிக்கூடுகள் 18, தேசிய அடையாள அட்டை 4, சாரதி அனுமதிப்பத்திரம் 4, வங்கி அட்டைகள் 4. மோட்டார் சைக்கிள் திறப்புகள் உள்ளிட்ட 39 திறப்புகள் என்பன மாநகர சபையில் உள்ளன.

இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களை உறுதிப்படுத்தி மாநகரசபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் 11ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக்கொள்ளலாம் என யாழ்மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.(05)





# பதுளை - மஹியங்கனை வீதி விபத்தில் ஒருவர் சாவு

பதுளை - மஹியங்கனை வீதியில் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இராணுவத்தினருக்குச் சொந்தமான வாகனம் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, ஓட்டோ இராணுவத்தினருக்குச் சொந்தமான வாகனத்திற்கும் கற்பாறைக்கும் இடையில் சிக்குண்டதில் ஓட்டோவின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏன் இந்த ஓரவஞ்சனை?

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை 21,000 ரூபாயாக மாற்றும் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டிருக்கிறார்.

இதன் பிரகாரம் , தொழிலார்களின் எதிர்கால ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக் கொடைக்கான கொடுப்பனவுகளை வைப்பிலிடும்போது இது குறைந்தபட்ச ஊதியமாக இந்தத் தொகை கருதப்படவேண்டும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் செப்டெம்பர் மாதம் முதல், தனியார் துறை முதலாளிகள்தங்கள்தொழிலாளர்ளுக்குதேசியகுறைந்தபட்ச சம்பளமாக 17,500 ரூபாவையும், 2005 ஆம் ஆண்டின் 36 மற்றும் 2016 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட நிவாரணச் சட்டங்களின் மூலம் வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி 3,500 ரூபாவையும் சேர்த்து 21,000 ரூபாய் குறைந்தபட்ச சம்பளத்தையும் வழங்குவது கட்டாயம்.

அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், புதிய குறைந்தபட்ச சம்மளமானது தொழிலாளர்களின் எதிர்கால வைப்புநிதி, ஊழியர்அறக்கட்டளைமற்றும்பணிக்கொடைக்கான கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேசிய குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அனைத்து தனியார் துறை தொழிலாளர்களுக்கும் தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை ஜனவரி 1, 2016 முதல் நடைமுறைப்படுத்தியது. இச் சட்டம் ஆரம்பத்தில் மாதச் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் 10,000 ரூபாயாகவும், நாளாந்த தொழிலாளர்களுக்கு 400 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டது.

2021ஆம்ஆண்டின்திருத்த சட்டத்தின் மூலம், குறைந்தபட்ச மாத சம்பளம் 12,500 ரூபாயாகவும், நாளாந்த சம்பளம் 500 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது, இது அதே ஆண்டு ஆகஸ்ட் முதல் நடைமுறைக்கு வந்தது.

நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் தனியார் துறையின் சம்பளம் 2021ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்கப்படவில்லை.

எனவே தேசிய குறைந்தபட்ச சம்பளத்தை 12,500 ரூபாவில் இருந்து 17,500 ரூபாவாக உயர்த்துவதற்கான சட்டத் திருத்த வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மற்றும் நாளாந்த குறைந்தபட்ச சம்பளத்தை 500 ரூபாவில் இருந்து 700 ரூபாவாக உயர்த்தப்பட்டது.

உரிய நடவடிக்கைகளைப் பின்பற்றிய பின்னர், இத் திருத்தம் செப்டம்பர் 3, 2024 அன்று நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது, சபாநாயகரால் நேற்று குறித்த சட்ட மூலத்தில் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து இம்மாதம் முதல் இது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அரசுத் துறை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொகை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கும் ஆளும்தரப்பு தனியார் துறைக்குமட்டும் 21,000 ரூபாய் குறைந்தபட்சச் சம்பளமாக அறவித்திருப்பது எந்த விதத்தில் நியாயம்? இது மாற்றாந்தாய் மனப்பான்மையில்லையா? சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஒருவர் அரச வேலையைப் பெற்றுவிட்டால் அவருக்கு ஆகக் குறைந்த சம்பளமாக 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையும் உயர் தரம் அல்லது பட்டப்படிப்பை முடித்தவர்கள் தனியார் துறையில் 21 ஆயிரம் ரூபாய் பெறுவதும் நியாயமானது அல்ல.

பொருளாதார நெருக்கடி எல்லோரையும் ஒரே மாதிரித் தாக்கும்போதும், இந்த நெருக்கடியால் வாழ்க்கைச் செலவு எல்லோருக்கும் ஒருமாதிரியாக உயரும்போதும் சம்பளம் மட்டும் அரசுத் துறையினருக்கு ஒரு மாதிரியாகவும் தனியார் துறையினருக்கு ஒரு மாதிரியாகவும் உயர்வது ஏற்புடைதே அல்ல. ஆட்சியாளர்களின் இந்தக் கொள்கை முதலில் மாற்றப்படவேண்டும். அரச பணியாளர்கள் அளவுக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்றாலும் அதில் அரைவாசிச் சம்பளத்தை தனியார் துறையினருக்குக் கிடைக்கச் செய்வது என்பது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல. குறைந்தபட்சம் அரச பணியாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்திற்கு நெருக்கமாகவாவது தனியார் துறையினரின் சம்பளமும் உயர்த்தப்படவேண்டும்.

# கல்விக்கு அழகு கசடற நடத்தல்



**மாதவன்**

ஆசிரியரும் கடவுளும் உங்கள் முன்னால் தோன்றினால் நீங்கள் யாரை வணங்குவீர்கள் என்றால் நான் ஆசிரியரைத்தான் வணங்குவேன். ஏனென்றால் ஆசிரியர்தான் எனக்கு கடவுளையே அறிமுகப்படுத்தியவர் என்றார் கபீர்தாசர்.

அண்மையில்பங்கேற்றஒருகலந்துரையாடலில், நாம் யாரிடமிருந்து எல்லாம் கற்க இயலும் என்ற கேள்வியை எழுப்பினேன். அம்மா, அப்பா, ஆசிரியர், நண்பன், சமூகம், சமூக ஊடகம், தொலைக்காட்சி, கூகுள், எதிரி என பலவகையான விடைகள் வந்தன.

கற்றல் என்பது எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் நடைபெறவல்லது. வகுப்பறையில் ஆசிரியர் பகிர்பவைகளில் போதிய விளக்கமின்மை இருந்தால்மதியஉணவுநேரத்தில்நண்பர்களுடனான பகிர்தல் எளிதில் விளக்கிவிடும்.

இளைய வயதில் குழந்தைகளுக்கு எது சரி, எது தவறு என குடும்பம் போதித்துவிட்டால் வாழ்வின் எஞ்சிய பகுதியில் அக்குழந்தைகள் நேர்வழியில், நேர்மறை சிந்தனையோடு வாழ்வது எளிதாகிவிடும்.

சமூகத்தில் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் நமக்கு ஆசிரியர்களே. அல்லனவோ நல்லனவோ கற்பிக்க வல்லவர் என்ற புரிதலுக்கு வந்தோம். அடுத்தபடியாக நம்மைச் சூழ்ந்த அனைவரும் கற்பிக்கும் கல்வி குறித்த விவாதம் நடந்தது. இரண்டு தரப்பு குறித்து அதிகம் கவலை தோய்ந்த கருத்துகள் வெளியாகின. அவை ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள்.

இவை ஏன் அவ்வளவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன? இந்தக் கேள்விக்கான விடை அனைவரும் அறிந்ததே. மனிதர்களையோ நூல்களையோ நாம் தேடிச்சென்றுதான் கற்க இயலும் என்ற நிலையில், இவை மனிதர்கள் இருக்கும் இடத்திற்கே வந்து கற்பிக்கும் அரிய வாய்ப்பினைப் பெற்றவை. அதுமட்டுமில்லாது இவற்றின் கற்பிக்கும் வல்லமை அளவிடற்கரியது. இந்த ஊடகங்கள் கற்பிக்கும் பாடப்பொருள் குறித்து அலசி ஆராயும்போதுதான் மக்களின் ரசனை குறித்த விவாதம் வந்தது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு அறிவியல் தொழில்நுட்பமிதமானவளர்ச்சிபெற்றிருந்தகாலத்தில் தொலைக்காட்சி என்பது மிகவும் அரிதானதாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக, வாரமொரு முறை திரைப்படம், திரையிசைப் பாடல்கள் மட்டுமே அதிகம் வரவேற்பு பெற்றிருந்த நிலையில் மக்கள் பலரும் வாசிப்பு போன்ற பொழுதுபோக்குகளில் ஈடுபட அனைவராலும் இயன்றது. ஆனால் இன்றைய நிலையில், அறைக்கொரு தொலைக்காட்சி, ஆளாளுக்கொரு அலைவரிசை என கற்றல் கற்பித்தல் மிதமிஞ்சுகிறது.

இப்படியான வாய்ப்புகளின் மூலம் சமூகத்தில் எங்கோ நடைபெறும் ஒரு செயலானது, எல்லா இடங்களிலுமே ஊர்களிலுமே நடைபெறுவது போன்ற பிம்பங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

தொலைக்காட்சித் தொடர்களின் மாமியார், மாமனார், மச்சாள்மார் போலத்தான் எல்லா குடும்பங்களிலும் வாய்க்கிறார்கள் என்றால் நீதிமன்றங்களின்பணிப்பளுதாங்குமோ? கதைக்குக் காலில்லை என்று நல்லவர்களுக்கும் ஒவ்வாத திசையையல்லவாஇவைகாட்டிக்கொண்டிருக்கின்றன.

அடுத்ததாக சமூக ஊடகங்களின் தாக்கத்தினைச் சொல்லி மாளாது... கைபேசி உள்ளோரெல்லாம் அலைவரிசைகளைத் தொடக்கி அவரவர்களின் தத்துவ விசாரங்களைப் பகிர்ந்துகொள்கின்றனர். இங்கே தத்துவ விசாரம் என்பது, ஒரு நாகரிகம் கருதிப் பகிர்ந்தாலும், அதில் நடைபெறும் கூத்துகள்

அனைவரும் அறிந்ததே. விதிவிலக்காக சில நல்லவற்றை பகிரலாம். இந்தக் குழுக்களில் விரும்பி நண்பர்களாகி விருப்பக் குறியிடாததால் பகைவர்களாவோரும் உண்டு.

இப்படியானபகிர்தலுக்குப்பிறகுமீண்டும்தவறான கற்றலை மறத்தல் தொடர்பான விவாதங்களும் எழுந்தன. இப்படியாக, 24 மணி நேரம்- வாரம் முழுவதும் என சமூகம் தவறானவைகளையும் சேர்த்துக் கற்பிக்கும்போது அவர்கள் பள்ளியிலுள்ள சுமார் 6 மணி நேரத்தில் அவர்கள் தவறானவற்றின் தாக்கத்திலிருந்து விடுபட வைத்து சரியானவற்றை ஆசிரியர்கள் சொல்லித்தர வேண்டியுள்ளது. இதனால் ஆசிரியர்களின் பணிப்பளு கூடுகிறது. கட்டற்ற சமூகம் ஆசிரியர்களின் பணிச்சுமையினைக் கூட்டுகிறது.

இன்றைய சூழலில் மேலே சொன்ன எதிர்மறை தாக்கங்கள் தவிர்க்க இயலாதாகிவிட்டது. ஆனால் அதே நேரம் தாக்கங்களைக் குறைக்கும் வல்லமையுள்ளவர்களாக மனிதர்கள் செயல்பட இயலும். தொலைக்காட்சித்தொடர்கள்போன்றவற்றை நெறிப்படுத்தும் கட்டுப்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக சமூக ஊடகங்கள் பல ஆரோக்கியமான மாற்றங்களுக்கு உதவும் வாய்ப்பு பெற்றவைகளாக இருந்தாலும் அவை நிகழ்த்தும் எதிர்மறை மாற்றங்கள், வெறுப்பரசியல் போன்றவை குறித்தும் கவலையில்லாமல் இல்லை.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் யாராவது ஒருவர் ஏதாவது தவறு செய்தால், ‘பார்த்தா படிச்சவன் மாதிரி இருக்கே! இந்த வேலையைச் செய்திருக்கியே!’ என்று கடிந்துகொள்வர். இன்று இப்படிப்பட்ட வசனங்களை முற்றிலுமே காணக்கிடைப்பதில்லை. இப்போது படித்தவர்கள், படிக்காதவர்கள் என்ற இரு தரப்பினருமே தவறு செய்வார்கள் என்ற பொதுப்புரிதல் உண்டாகிவிட்டிருப்பது ஒரு சமூக அவலம்.

கல்வி என்பது மனிதனை பண்படுத்துவது. அவனது நடத்தைகளில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தவல்லது. எது சரி? எது தவறு? என்ற புரிதலை ஏற்படுத்தவல்லது.

அதிவீரராமபாண்டியர்தமது‘வெற்றிவேற்கை’யில், ‘கல்விக்கழகு கசடற மொழிதல்’ என்பார். எடுத்துச்சொல்வது மட்டுமே கல்வி என்ற புரிதல் இருந்த காலம் அது.

இன்று, தனிமனிதர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் அடுத்தவர்களுக்கான பாடம் என்ற அளவில் நிலமை ஏற்பட்டுள்ளது. இதை மேம்பாடு என்றும் ஏற்கலாம். அந்த வகையில் ஒவ்வொரு தனிமனிதர்களும் தங்களது நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

# புத்தளம் கலாசார மண்டபத்தில் மாபெரும் குருதித் தான முகாம்

(எம்.சியாஜ்)

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் குழுவினரான 2003 க.பொ.த.(சா/த) குழுவினரான 'சஹீரியன்ஸ் ட்யூட்ஸ்' அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ள இரத்த தான முகாம் சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து புத்தளம் கலாசார மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

'உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்' எனும்

தொணிப்பொருளில் இந்த இரத்த தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் அண்மையிலே புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனைக் கருத்தில் கொண்டே பழைய மாணவர் சங்கம் இரத்த தான நிகழ்வை உடனடியாக ஏற்பாடு செய்துள்ளது.

பெண்களும் இரத்தம் தானம் செய்வதற்கான விரிவான பிரத்தியேகமான இட அமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தளம் தள வைத்தியசாலையுடைய இரத்த வங்கி பொறுப்பாளர் டாக்டர் மெரீனா தலைமையில் நடைபெறவுள்ள இந்த இரத்த தான நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு ஆர்வத்தோடு இரத்த தானத்தை வழங்குமாறு பழைய மாணவர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.(05)

# கண்டியில் தேர்தல் கூட்டத்தில் பட்டாசு வெடித்த மூவர் கைது

கண்டியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பட்டாசுகள் வெடித்ததால் பொலிஸ் அதிகாரிகள் உட்பட எட்டு பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸவுக்கு சார்பாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து, பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.(05)

# ஓமந்தையில் தொடருந்து மோதியதில் பெண் சாவு

வவுனியா, ஓமந்தையில் ரயில் மோதி பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இருந்து வவுனியா நோக்கி செவ்வாய்க்கிழமை மாலை சென்ற ரயில் புளியங்குளம் பகுதியை கடந்து ஓமந்தையை நோக்கி நகர்ந்த போது புகையிரத தண்டவாளத்தில் நடந்து சென்ற பெண் மீது புகையிரதம் மோதி விபத்துக்குள்ளானது. இதில், குறித்த பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். மரணமடைந்தவர் சுமார் 35-45 வயது மதிக்கத்தக்கவர் எனவும், இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவித்த ஓமந்தைப் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தனர். (05 -100)





# மஸ்ஜிதுல் கபீர் பள்ளிவாசலில் புதிய கட்டடப் பணி தொடக்கம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் பள்ளிவாசலுக்கான பெண்கள் தொழுகை அறை, தொழுகை செய்யும் இடம், களஞ்சிய அறை, குளியலறை, சமையலறை, மலசலகூடத் தொகுதிகளை உள்ளடக்கியதான கட்டட தொகுதிக்கான ஆரம்பப் பணிகளை முன்னெடுக்கும் நிகழ்வு பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை தலைவரும் விவசாயம், விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான அல்ஹாஜ். எம்.எஸ்.அபுல் கலீஸ் முன்னிலையில் கட்டட குழு தலைவரும் மருதமுனை பறக்கத் டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாளருமான அல்ஹாஜ் எம்.ஐ.ஏ. பரீட் தலைமையில் செவ்வாய்க்கிழமை



நடைபெற்றது.

பள்ளிவாசல்களை அழகு படுத்துதல், மஹல்லா வாசிகளுக்கு தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மருதமுனை ஜம் இய்யத்துல் உலமா சபை தலைவரும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான அல்ஹாஜ் எப்.எம்.அஹமது அன்ஸார் மௌலானா விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின்கலைகலாசாரபீடத்தின்பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் மருதமுனையின் வரலாற்றில் பள்ளிவாசல்களின் வகிபங்கு அதற்கு பிரதேச மற்றும் பிரதேசத்திற்கு வெளியில் வாழும் மக்கள் வழங்கி வரும் பணிகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசலில் பேஷ் இமாம் அல்-ஹாபிழ் மௌலவி ஏ.ஆர்.பைசல் கியாஸ் நிகழ்த்தினார். இதனை அடுத்து பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், மரைக்கார் மார், குடி வழித் தலைவர்கள், மஹல்லா வாசிகள் என பலரும் ஆரம்ப பணிகளுக்கான கட்டுமான வேலை திட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



இப்பள்ளிவாசல் கட்டடக் குழு தலைவராக பறக்கத் டெக்ஸ் நிறுவனத்தின் மேலாளர் எம்.ஐ.ஏ. பரீட் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவருடைய சொந்த நிதி அனுசரணையில் தனது தாய், தந்தையர்கள் நினைவாக இந்த கட்டடத் தொகுதி அமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. நிகழ்வுகளை கட்டடக் குழு செயலாளர், சிரஷ்ட உடற்கல்வி ஆசிரியர் யூ.எஸ். சமீம் ஒருங்கிணைப்பு செய்து தொகுத்து வழங்கினார்.(05)



# இலங்கையர்கள் 2,252 பேருக்கு இஸ்ரேலில் தொழில் வாய்ப்பு



இஸ்ரேல் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக இலங்கை இளைஞர்கள் 2252பேருக்கு இஸ்ரேலிலில் விவசாய துறையில் தொழில் வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 12ஆம் திகதி மற்றும் 18ஆம் திகதிகளில் இஸ்ரேலுக்கு புறப்பட்டுச் செல்ல இருக்கும் 69 இளைஞர்களுக்கான விமான பற்றுச்சீட்டு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்றது.

இஸ்ரேல் அரசாங்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கமைய 5 வருடகாலம் இஸ்ரேலில் தொழிலில் ஈடுபட அனுமதி வங்கப்பட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கு தொழிலுக்காக இலங்கைஅரசாங்கம்சார்ப்பாக பணியகத்தால் நபர்கள் அனுப்பப்படுவதுடன் தொழில் வாய்ப்பாளர்கள் தெரிவு செய்யப்படுவது, இஸ்ரேலின் பீகா நிறுவனத்தின் அதிர்ஷ்ட சீட்டுமுறையில்மாத்திரமாகும்.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் நபர்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பணியகத்தினால் மேற்கொண்டு இஸ்ரேலுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இரண்டு அரசாங்கங்களுக்கிடையில்மேற்கொள்ளப்பட்டிருக்கும்புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைய இஸ்ரேலில் விவசாய துறையில் தொழில் கிடைக்கப்பெறுகிறது.

இந்த தொழில் வாய்ப்புக்காக தொழிலாளர்களை இணைத்துக்கொள்ள வேறு எந்த நபர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

அதனால் இஸ்ரேலில் விவசாய துறையில் தொழில் பெற்றுக்கொள்வதற்காக வேறு வெளிநபர்கள் யாருக்கும் பணம் வழங்குவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் பணியகம் பொது மக்களை கேட்டுக்கொள்கிறது. (05)

# மூன்று வயதுச் சிறுமி மீது பாலியல் துஸ்பிரயோகம்

## உறவினர் கைது

3 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புலஸ்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

புலஸ்திகம பிரதேசத்தைச் சேர்ந்த உறவினரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

சந்தேக நபரான உறவினர் சிறுமியின் வீட்டில் யாரும் இல்லாத போது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

மறுநாள் சிறுமியின் பாட்டி சிறுமியைக் குளிப்பாட்டுவதற்காக அழைத்துச் சென்ற போது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதை அறிந்துள்ளார்.

பின்னர், சிறுமியின் பாட்டி இது தொடர்பில் புலஸ்திகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலன்னறுவை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புலஸ்திகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் இறப்பு: இருவர் காயம்

பன்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹாகல தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என பன்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

ஹாகல தோட்டத்தில் இருந்த குளவி கூடு ஒன்று கலைந்ததால் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, இந்த தோட்டத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த பெண்ணொருவரும் இரண்டு நபர்களும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தவலந்தன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

(05)

# தாண்டிக்குளத்தில் மோட்டர் குண்டு மீட்பு

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்று காணி ஒன்றில் இருந்து மோட்டர் குண்டு ஒன்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றை அதன் உரிமையாளர் துப்புரவு செய்த போது குறித்த காணியில் சந்தேகத்திற்கிடமான வெடி பொருள் இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து, வவுனியா பொலிஸாருக்கு அறிவித்தையடுத்து அவர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து பார்வையிட்டதுடன், அது மோட்டர் குண்டு என உறுதிப்படுத்தினர். விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05 - 100)



காலைக்கதிர் Kalaikkathir

# இரண்டு மசாஜ் நிலையங்கள் சுற்றிவளைப்பு 9 பேர் கைது

ஜா எல, தடுகம பிரதேசத்தில் மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த இரு விபச்சார விடுதிகளிலிருந்து09பெண்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஜா எல பொலிஸார் தெரிவித்தனர்.

ஜா எல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, ஒரு விபச்சார விடுதியிலிருந்து ஐந்து பெண்களும் மற்றைய விபச்சார விடுதியிலிருந்து நான்கு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லவாய, தம்புள்ளை மற்றும் கெக்கிராவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# குறிஞ்சாக்கேணி மாணவன் உலக சாதனை படைப்பு



(எச். எம் ஹலால்தீன் )

ஐக்கிய இராச்சியத்தை தலைமையகமாக கொண்ட உலகளாவிய சாதனை புத்தக நிறுவனத்தால் உலக சாதனையாளர்களை இனம்காண்பதற்கான போட்டியில் கிழக்குமாகாணத்தின்கிண்ணியாகுறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த 4 வயதையுடைய மாணவன் நஸ்மி அக்லான் பிலால் புதிய உலக சாதனையாளனாக தன்னை அடையாளப்படுத்தியுள் ளார்.

இம் மாணவன் பத்தின் 100 ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2நிமிடம்12 செக்கன்களில் வேகமாகக் கூறிஇச்சாதனையை நிகழ்த்தினார்.

இச்சாதனைசெய்தமைக்காக மேற்படி குறித்தநிறுவனத்தால் சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கி குறித்த மாணவனை அண்மையில் கௌரவித்துள்ளது.

இவரின் பெற்றோர் கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் நஸார் முஹமட் நஸ்மி மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் கடமையாற்றும் இயன் மருத்துவர் அஸ்ரப் பாத்திமா பஸீஹா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# போலி ஆவணங்களுடன் மாத்தறையில் ஐவர் கைது

மாத்தறையில் போலி ஆவணங்களுடன் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எள மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி, மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மஹரகம, கொட்டாவை, பிலியந்தலை, பாதுக்கை மற்றும் கம்புருப்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 32, 36, 40 மற்றும் 60 வயதுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கடற்கரைப் பூங்கா பகுதியில் வைத்து போலியான சாரதி அனுமதிப்பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்கள், மருத்துவப் பட்டச் சான்றிதழ்கள், பட்டச் சான்றிதழ்கள், அரச அதிகாரிகளின் பெயர்கள் கொண்ட உத்தியோகபூர்வ முத்திரைகள் ஆகியவற்றுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபரிடம்மேற்கொள்ளப்பட்டவிசாரணையில் மேலும் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், மஹரகம மற்றும் பிலியந்தலை பிரதேசங்களில் இருந்து 168 போலியான சாரதி அனுமதிப்பத்திரங்கள், 01 மடிக்கணினி, 03 பிரிண்டர்கள், கணனி மற்றும் அதன் பாகங்கள், போலி பட்டதாரி சான்றிதழ்கள், வருமான சான்றிதழ்கள், போலி முத்திரைகள், ஆவணங்களை தயாரித்து சம்பாதித்ததாக சந்தேகிக்கப்படும் 5000 ரூபா பெறுமதியுடைய பணத்தாள்கள் 30 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# ஓட்டோ விபத்தில் ஐந்து பேர் காயம்

*பதுளை - பசறை பிரதான வீதியில் 05 ஆவது மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.*

*இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.*

*சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கால்வாயில் கவிழ்ந்து வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.*

*இந்த விபத்தின் போது, ஓட்டோவில் பயணித்த ஐந்து பேர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)*



## கோசம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தின் பின்னர் 99 வருடத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்குக் குத்தகை காணிகளை வழங்க இருக்கிறோம்.

கேள்வி : சிகிரிய, தம்புள்ள போன்று ஹபரணயிலும் சுற்றுலா வலயம் அமைக்க முடியுமா? ஹோட்டல்கள், வீடுகளை அடிப்படையாகக் கொண்ட ஹோட்டல்கள் பெருமளவில் உள்ளன. அவற்றுக்கு காணி உறுதி கிடையாது. அதற்கும் தீர்வு வழங்கப்படுமா?

பதில்: ஹபரண மட்டுமன்றி முழு நாட்டையும் சுற்றுலா வலயமாக்குவேன். 1965 இல் ஜே.ஆர். இராஜாங்க அமைச்சராக இருந்தபோது சுற்றுலா வலயம் தொடர்பில் யோசனை முன்வைத்தார். நாம் இன்னும் மாறவில்லை. நாம் இன்னும் பழைய முறையிலே இருக்கிறோம். எனவே, முழு நாட்டையும் சுற்றுலா வலயமாக மாற்றுவோம்.

கேள்வி: வரி விதிப்பது நல்லது. அதில் மாற்றம் செய்யப்படுமா?

பதில்: வற் அதிகரிப்பினால் ஏற்பட்ட பிரச்சினையை அறிவேன். வருமான வரி தொடர்பில் முறைமை ஒன்றை தயாரித்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி மீளாய்வு செய்யக் கோரியுள்ளோம். அதற்கு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தேவையான போது மீளாய்வு செய்து செயற்படும் வகையில் நிபந்தனைகள் இடப்பட்டுள்ளன. இது தெரியாமல் சிலர் குரங்கு போல பாய்ந்து செல்கின்றனர் - என்றார்.

## தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8.30 முதல் மாலை 4.30 வரை தத்தமது மாவட்ட செயலக அலுவலகத்தில் தபால்மூல வாக்கை அளிக்க முடியுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தபால் மூலம் வாக்களிக்க தகுதிபெற்ற அரச உத்தியோகத்தர்கள் வாக்களிப்பதற்காக இதற்கு முன்னர் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அவரவர் பணிபுரியும் அரச நிறுவனங்களில் அமைக்கப்பட்டிருந்த தபால்மூல வாக்களிப்பு நிலையங்களில் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டிருந்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 736,589 அரச உத்தியோகத்தர்கள் தபால்மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

இதனிடையே தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கையால் மாவட்ட செயலகங்களை அண்மித்த பகுதிகளில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் பொலிஸாரால்; முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் 'சுரகிமு தருவென்' (குழந்தைகள் பாதுகாப்பு) தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் பிரியந்த ஹேரத், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு செய்த போதிலும் இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, இந்த விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு உண்டு என தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தினரது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கங்களுக்காக நாங்கள் கட்சியை விட்டுச் செல்லவில்லை.

பெரும்பான்மையானவர்கள் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவுக்கு நிச்சயம் வாக்களிப்பார்கள் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இவர்களுக்கு ஏன் வாக்களிக்கக்கூடாது என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

இந்த மூன்று வேட்பாளர்கள் இராணுவத்தினரது உரிமைகளை பாதுகாப்பதாக குறிப்பிடுகிறார்கள். 30 வருட கால போரை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை நல்லாட்சியே சர்வதேசத்துக்கு காட்டிக் கொடுத்தது. இதற்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார ஆகியோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

இராணுவத்தினரது உரிமைகள் பற்றி பேசுவதற்கு ரணில், சஜித், அனுர ஆகியோருக்கு தார்மீக உரிமை கிடையாது. இவர்களின் அரசியல் மேடைகளுக்குச் செல்லும் இராணுவத்தினர் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.

போர்க காலத்தில் வடக்கு மாகாணத்துக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் விநியோகத்தை வேண்டுமென்றே இடைநிறுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. போர்ச் சூழலிலும் வடக்கு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றினோம்.

இராணுவத்தினர் போர்க் குற்றச்சாட்டுக் களில் ஈடுபடவில்லை என்பதை எடுத்துரைக்கும் வகையில் தான் கோட்டாபய ராஜபக்ச, ஐ.நாவின் 30/1 தீர்மானத்துக்கு இணையனுசரனை வழங்குவதில் இருந்து விலகினார். இராணுவத்தினரின் கௌரவம் மற்றும் உரிமைகளை பொது ஜன பெரமுனவினால் மாத்திரமே பாதுகாக்க முடியும்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப் பதற்காகவே இராணுவத்தினர் தமது உயிரை நாட்டுக்காக தியாகம் செய்தார்கள். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்கக்கூடாது என்பதை கடுமையாக குறிப்பிட்டார்கள். இராணுவத்தினரது அர்ப்பணிப்புக்கு உரிய மதிப்பளிக்கப்படுகிறதா?

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக ரணில், அனுர, சஜித் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். 13க்கு ஒருபோதும் இடமில்லை என்று நாமல் ராஜபக்ச மாத்திரமே குறிப்பிடுகிறார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க விரும்புபவர்கள் பொது ஜன பெரமுனவுக்கு வாக்களிக்க வேண்டும். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க முடியாது என்று குறிப்பிடும் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு பெரும்பான்மையினர் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள் என்றார்.

## அநுரகுமார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடல்ல. நாம் மேற்கொள்ளும் எந்தச் செயற்பாட்டிற்கும் எதிர்க்கட்சி எந்தப் பாராட்டையும் தெரிவிப்பதில்லை. அவர்கள் இந்த முழு விவகாரத்தையும் தவறாகத்தான் பார்க்கிறார்கள். 'நாம் நரகத்தின் இடைவேளையில் இருக்கிறோம்.' என எதிரணி சொன்ன விடயம் உண்மைதான். நாங்கள் மிகவும் கடினமான பயணத்தில் இருக் கிறோம். இதே பாதையில் சென்றால் மீளலாம். கொஞ்சம் நகர்ந்தாலும் உடைந்து விழும்.

இந்தப் பிரச்சினையை சஜித் பிரேமதாச சிறுபிள்ளைத்தனமாகத் தீர்க்க முயற்சிக்கிறார். கடன் நிலைத்தன்மை தொடர்பில் மீள பேச்சு நடத்தப்படும் என்று திசைகாட்டி கூறுகிறது. இந்தப் பேச்சுக்கே எமக்கு இரண்டு வருடம் சென்றது. அவர்களின் பேச்சினால் அடுத்த 5 மாதங்களில் எமக்குக் கிடைக்க இருக்கும் 1.3 பில்லியன் டொலர் நிறுத்தப்படும்.. டொலரின் பெறுமதி 400 ரூபாயாக உயரும். அடுத்து என்ன நடக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்துபார்க்கலாம்.

மக்களை ஏமாற்ற முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எப்போதும் கூறிவருகிறார். அவர் பயமின்றி கடினமான முடிவுகளை எடுத்தார்.

அன்று சுவர்களில் சித்திரம் வரைந்த இளைஞர்கள்தான் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினார்கள். உணர்வுபூர்வமாக செயற்படாமல் சிந்தித்து செயற்பட வேண்டும். அரசுக்குக் கிடைக்கும் 70 வீத வருமானம், அரச ஊழியர்களின் சம்பளம் போன்றவற்றுக்கே செலவாகிறது. திருட்டு பற்றி சில வேட்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள். திருடிய பணம் கிடைக்கும் வரை எத்தனை வருடங்கள் காத்திருக்கப் போகிறீர்கள். இரண்டு அடி முன்னோக்கிச் சென்று ஒரு அடி பின்னோக்கிச் செல்லாது உறுதியான நாட்டை உருவாக்க அனைவரும் கைகோர்க்கவேண்டும் - என்றார்.

## கவிழப்போகும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே நான் ஆளும்தரப்புக்குப் பயமில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தவறான தீர்மானத்தை எடுத்தால் நாடு பெரும் அழிவை எதிர்கொள்ளும். எனவே மக்கள் பிரதிநிதி என்ற ரீதியில் அவர்களுக்கு யதார்த்தத்தை உணர்த்த வேண்டியது எனது கடமையாகும். எனக்கு யாரும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை. இது நான் சிந்தித்து எடுத்த தீர்மானமாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக நான் வாக்களித்திருக்கின்றேன். ஆனால் அவர் என்னை இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியிருக்கின்றார். பதவிக்காக ரணிலுக்கு தேவையான தீர்மானத்தை தீர்மானத்தை என்னால் எடுக்க முடியாது. அதற்கான அவசியமும் இல்லை. சஜித் வெற்றி பெறுவார் என்பதால் தானே நீங்கள் அங்கு சென்றீர்கள் என்று என்னிடம் கேட்கின்றனர். அதுவே உண்மையாகும்.

கவிழப்போகும் கப்பலில் ஏறி தற்கொலை செய்து கொள்ள நான் விரும்பவில்லை. சரியான பாதையில் பயணிப்பதற்காக எந்தவொரு தியாகத்துக்கும் நான் தயாராகவே இருக்கின்றேன். எனவே இராஜாங்க அமைச்சு பதவி பறிபோனதில் கவலை இல்லை.

அரசியலுக்காகவே நான் சுவிட்ஸர்லாந்து குடியுரிமையையும் இழந்தேன். அதனால் எனக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற் பட்டது. எனினும் அதனைவிட நான் மக்களுக்கு சேவையாற்றுவதற்கே முன்னுரிமை யளித்தேன் என்றார்.

## மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாராந்தக் கேள்வி பதில் என்ற தலைப்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்காக இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்கியிருப்பதாகக் கூறுகிறீர்கள். அவ்வாறெனில் தமிழ்பேசும் மலையகத் தமிழர்களும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களும் தமிழர்கள் இல்லையா? அவர்களை ஏன் உங்களது தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோரவில்லை? என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு அளித்திருக்கும் பதிலில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கும் சி.வி.விக்கினேஸ்வரன், இதுபற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழ் பொதுவேட்பாளர் அரியநேத்திரன் நாடாளுமன்றத்தில் மலையக மக்களுக்காக முன்னர் குரல் கொடுத்தவராவார். அவர் மலையக மக்களை சகோதர சகோதரிகளாகவே நேசிக்கின்றார். மலையக மக்கள் அவர் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார். தமிழர்கள் என்ற ரீதியில் மலையகத் தமிழர் ஒவ்வொருவரும் தமது மூன்று விருப்பு வாக்குகளில் ஒரு வாக்கை அவருக்கு அளிப்பதை அவர் கட்டாயமாக மனமுவந்து ஏற்றுக்கொள்வார். ஆனால் வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சனைகள் வேறு, மலையக சகோதர சகோதரிகளின் பிரச்சனைகள் வேறாகும். எனினும் நாம் யாவரும் தமிழ் பேசும் மக்களாக ஒன்று சேரலாம். அதில் தவறில்லை

அது மட்டுமல்ல, 1977ஆம் ஆண்டளவில் மலையகத்திலே முடுக்கிவிடப்பட்ட கலவரங்கள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்துவந்த பல மலையகத் தமிழர்கள் வன்னி மாவட்டத்தில் குடியேறியுள்ளார்கள். இப்போது அவர்கள் எமது மக்களாவர். வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் பாரம்பரிய உரிமைகள் அவர்களையும் சாரும். ஆகவே தமிழ் பேசும் மக்கள் எங்கிருந்தாலும் எமது தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்க முன்வர வேண்டும்.

வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களிடையே இன்று ஒரு மறுமலர்ச்சி பரிணமித்திருக்கின்றது. உலக அரங்குகளில் எமது குரல் ஓங்கி ஒலிக்க நாம் ஒரு பலமான மக்கள் கூட்டம் என்ற உண்மையை நிலைநிறுத்துவது அவசியம். இவ்வாறான ஒரு தமிழ்மொழி சார்ந்த ஈடுபாடு மலையகத்திலும், கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே. நாம் யாவரும் தமிழ்த் தாயின் மக்களே என்ற உணர்வை இந்த ஈடுபாடும் நிலைப்பாடும் ஏற்படுத்துகின்றன.

அண்மையில் 30க்கும் மேற்பட்ட மலையக புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் போன்றோர் அரியநேத்திரனுடன் இணையவழியில் தொடர்புகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். தாம் யாவரும் ஒன்றுபட்ட தமிழினமாக தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாகவும், மலையகத்தில் அவரை ஆதரித்து தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடப்போவதாகவும் அவர்கள் அறிவித்தனர். அத்துடன் பொதுவேட்பாளரை மலையகத்திற்கு மக்கள் சந்திப்புக்காக அழைத்துள்ளனர். பொதுவேட்பாளரும் அவர்களது கூட்டத்தில் பங்கேற்க இணங்கியுள்ளார்.

நான் தொடக்கத்தில் இவ்வாறு கோராததற் குக் காரணம் கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவர்கள் பலர் வட, கிழக்கு இணைப்பை ஏற்க மறுக்கின்றார்கள். மற்றும் மலையகத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் நாம் எமது பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் எமது அரசியல் கோரிக்கைகளை முன்னிறுத்துவதை அவ்வளவாக வரவேற்கவில்லை.

பெரும்பான்மை வேட்பாளர்களுடன் சேர்ந்தே பயணிக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் இப்பொழுது எமது மலையக சகோதர சகோதரிகளும், கிழக்கிலங்கை முஸ்லிம் சகோதர சகோதரிக ளும் நாம் யாவரும் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒன்றுசேர விரும்புவது மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. பொதுவேட்பாளர் கட்டாயமாக வட, கிழக்கு பிரமுகர்களை மலையக பிரச்சாரப்பணிகளுக்காக அனுப்பிவைப்பார் என்று நம்புகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தெரிவித்ததாவது:

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவை வெற்றிபெறச் செய்ய, 'ரட பெரட்' என்ற கருப்பொருளை மக்கள் மயமாக்குவதற்கு நானே வித்திட்டேன். அதேபோன்று 2010இலும் மஹிந்த ராஜபக்சவை வெற்றிபெறச் செய்ய முன்னின்று செயற்பட்டேன். ஆனால் நாட்டின் எதிர்காலம் தொழிலாளர்களை பலப்படுத்தும் வேலைத்திட்டங்களுடனே அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோதும் அதனை அவர்கள் சரியாக செய்யவில்லை. இடதுசாரி கொள்கையுடன் செயற்படத் தவறினார்கள்.

அதேபோன்று ரணில் விக்ரமசிங்க, அனுரகுமார திஸாநாயக்க எங்களை பயமுறுத்த முடியாது. நாங்கள் எப்போதும் இடதுசாரி கொள்கைக்காக போராடி வருபவர்கள். மக்கள் விடுதலை முன்னணி இடதுசாரி கொள்கை பதாதையை காட்டிக்கொண்டு 'டீல்' அரசியலை செய்து வருகிறது. அவர்கள் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள சிவப்பு நிறத்தைக்கொண்டு தற்போது மறைக்கிறார்கள்.

இடதுசாரிகள் எப்போதும் தொழிலாளர்க ளின் உரிமைக்காக போராடி வருபவர்கள். அதனால் ஆளும் தரப்போ அல்லது அதன் பெயரால் தொழிலாளர்களின் உரிமை களை இல்லாதொழிக்க யார் செயற்பட்டாலும் அதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

இடதுசாரிகளின் சகோதரத்துவம் என்பது உள்ளத்தால் வருவதாகும். ஆனால் இன்று அந்த சகோதரர் என்ற வார்த்தை சொந்த அரசியல் நலன்களுக்காகப் பயன்டுத்தப்பட்டு வருகிறது. அதனால் அரசியல் நோக்கத்துக்காக அந்த வார்த்தையை பயன்டுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். எனது தந்தை இடதுசாரிக் கொள்கையுடையவர். எனது தந்தையின் வழியிலே நானும் இருந்து வந்தேன். அரசியலுக்குவரும் நோக்கம் எனக்கு இருக்கவில்லை. என்றாலும் தற்போதுள்ள ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றி இந்த நாட்டை அழித்து வருகின்றனர்.

தனால் தொடர்ந்து இதனை பார்த்துக்கொண்டு இருக்க முடியாமலே இந்தமுறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்தேன். எனவே நாட்டை கட்டியெழுப்ப முறையான வேலைத்திட்டத்தை நாங்கள் வெளியிட்டிருக்கிறோம். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கைக்கும் எனது வேலைத்திட்டத்துக்கும் பெரும் வித்தியசத்தை காணலாம். அதனால் மக்கள் எனது வேலைத்திட்டத்தை பார்த்து, நாட்டை முன்னேற்ற எனக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றார்.

## 359 கைதிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளரும், ஊடகப் பேச்சாளருமான காமினி திஸாநாயக்க தெரிவித்தார்.

# அருள்மிகு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் அனுசரணையில் பாடசாலைக்கு உதவிகள்







(பி.கேதீஸ்வ்)

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த அருள்மிகு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் நிதி அனுசரணையில் நுவரெலியா பிரதேச சிரேஸ்ட ஊடகவியலாளர் தியாகு ஊடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் உடைந்த நிலையில் காணப்பட்ட மாணவர் மேசை நாற்காலிகள் (100) திருத்தம் செய்யப்பட்டு மாணவர்களின் பாவ ணைக்காக செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸிடம் கையளிக்கப்பட்டன. (05)

# ரணிலை ஆதரித்து இளைஞர் ஒன்றுகூடல்







(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இளைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இரவு சாய்ந்தமருதில் அமைந்துள்ள ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பு காரியாலயத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதிக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட், விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.றிபாஸ், சமூக செயற்பாட்டாளர் அஸ்வர் சலாம் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக கல்முனைத் தொகுதியில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளை இளைஞர்களின் பங்களிப்புடன் மேலும் விஸ்தரித்து காத்திரமாக முன்னெடுப்பது குறித்து வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் ஏ.எம். ஜாஹிர், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.பஸ்மீர், ஐ.தே.க. வட்டார அமைப்பாளர்கள், கட்சிப் பிரமுகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெருந்திரளான இளைஞர்கள் பங்கேற்றிருந்தனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2024இல் வெளியிடப்பெற்றது